மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4]1992.) நிறைவேற்றப்பெற வேண்டும் '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதேபோன்று அடுத்த சட்டமுன்வடிவும் கல்வி அமைச்சருடைய இதே பொருள் தொடர்புடையது. (குறுக்கீடு). அது அமைச்சர் வேறு. (குறுக்கீடு) இவை இரண்டையும்தான் சேர்த்து எடுக்க முடியும். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் படித்தாலே புரியும். மூன்றும் நான்கும், இரு அமைச்சர்களுடையதாக இருந்தாலும்கூட, இரண்டு பத்தியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளச் சொன்னதற்கு பின்னால் விவாதம் முடிந்ததற்குப் பின்னால், தனித்தனியாக எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளக் கோருவது இரு அமைச்சர்கள். ஒரே அமைச்சர் கோரலாம். ஒரே அமைச்சர் என்றால் அந்த மாதிரி எடுத்துக் கொள்ளுமாறு அவரைக் கேட்டுக் கொள்ளலாமே தவிர, ஒரு அமைச்சர் ஒரு சட்டமுன்வடிவை முடிப்பதற்குள் இன்னொரு அமைச்சர் தொடர்புடையதை எடுக்க முடியாது. ஆகவே, நீங்கள் விவாதிக்கின்றபோது, உறுப்பினர்கள் பேசுகின்றபோது, அதைச் சேர்த்துப் பேசுகிற மாதிரி வைத்துக்கொள்ளலாம்.

இரண்டாவது, தனியாக எடுத்துக் கொள்ளலாம். மூன்றும், நான்கும் ஒரே பொருள்தான். எம்.ஜி.ஆர். மருத்துவப் பல் கலைக் கழகமும், இதே பொருளில்தான் வருகிறது. அப்போது பேசுகின்ற உறுப்பினர்கள் அந்த இரண்டு பற்றியும் சேர்த்து பேசிக் கொள்ளலாம். இப்போது பச்சையப்பனுக்கு மட்டும், இரண்டாவதை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

முற்பகல் 11-30

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992ஆம் ஆண்டு பச்சையப்ப அறக் கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 1/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பால கிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : அடுத்த பில்லிலேதான் பேசப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி, பச்சையப்பன் அறக்கட்டளையில் பேசப்போகிறீர்களா அல்லது பல்கலைக் கழகங்கள் சட்டத்திலே பேசப்போகிறீர்களா ?

திரு. வே. தம்புசாமி : பல்கலைக் கழகங்கள் பில்லிலேதான் பேசப்போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

---

* 4—2—1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1992 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1992ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.